THE WORLD NEEDS THE WORD
IBT

செப்டம்பர் 2025
மலர் 23, இதழ் 12


# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# நமது வேண்டுதல்களுக்கு பதில் அளிக்கும் தேவன்



# நமது வேண்டுதல்களுக்கு பதில் அளிக்கும் தேவன்

*"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" (லூக்கா 11 : 9).*

*"Ask and it shall be given you; Seek and you shall find; Knock and it shall be opened to you" (Luke 11 : 9).*

தேவனைப் பொருத்தவரை நம் ஒவ்வொருவரையும் தம்முடைய பிள்ளைகளாக நினைவு கூறுகிறார். அந்த உறவை உறுதிப்படுத்திக் கொள்ள அநேக வாக்குத்தத்தங்களையும், வாக்குறுதிகளையும் நேரிடையாக வழங்கியிருக்கிறார். இந்த இரண்டையும் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், நாம் விசுவாசிக்க வேண்டும், கர்த்தர் பேரில் நம்பிக்கை கொள்ள வேண்டும். காத்திருக்க வேண்டும், எந்த சூழ்நிலையிலும் மனம் தளரக்கூடாது. யாக்கோபைப் போல் கர்த்தரிடமிருந்து அந்த வாக்குறுதிகளின் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும்வரை கர்த்தரை இறுக்கமாக பற்றிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் கேட்போர், தேடுவோர், தட்டுவோர் எத்தனை பேர் என்றோ, கேட்போர் யாரென்றோ நம் ஆண்டவர் பார்ப்பது இல்லை. யாராக இருந்தாலும், அவரவர்களின் தேவையைப் பரிபூரணப்படுத்துகிறார். அதற்குக் காரணம், கடவுளின் பார்வையில் நாம் சிறப்புக்குரியவர்களாக உள்ளோம்.

லூக்கா 11-ஆம் அதிகாரத்தில் வாக்குறுதிகளைப் பற்றி எழுதின லூக்கா, அதே புஸ்தகம் 15-ஆம் அதிகாரத்தில் மூன்று உவமைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். காணாமல் போன ஒரு ஆடு, காணாமல் போன ஒரு வெள்ளிக் காசு, காணாமல் போன மகன். இதிலே காணாமல் போன ஆட்டுக்கு பகுத்தறிவு கிடையாது. மேய்ப்பன் ஒருவரைத் தவிர வேறு யாரையும் அடையாளம் தெரியாது. அதற்கு மற்ற 99 ஆடுகள் வந்து சேர்ந்த பாதையை கண்டுபிடிக்க முடியாது. சத்தம் போட்டு, தான் இருக்கும் இடத்தை மேய்ப்பனுக்கு அறிவிக்க முடியும். காணாமல் போன வெள்ளிக்காசு புத்தியில்லாதது. தான் எங்கே விழுந்து கிடக்கிறோம் என்று கூப்பிட முடியாது. வெள்ளிக்காசு கீழே விழும்போது 'ணங்' என்ற சத்தத்துடன் விழுந்ததால் அது வீட்டை விட்டு வெளியே விழுந்திருக்க சந்தர்ப்பமே கிடையாது. ஆகவே, வீட்டுப் பெண், வீட்டைப் பெருக்கி, விளக்கைக் கொளுத்தி கண்டு பிடித்து விடலாம். ஆனால், காணாமல் போன மகனின் உவமை சற்று வித்தியாசமானது. எப்படியென்றால் மனிதனுக்கு ஆறு அறிவை கொடுத்திருக்கிறார். ஆறாவது அறிவானது நல்லது, கெட்டதை பகுத்தறியும் தன்மை கொண்டது. ஆகவே, மகன் காணாமல் போனாலும் வீட்டிற்கு வருவதற்கு பாதை / வழி / தடம் தெரிந்தவனாதலால் தகப்பன் தேடிப் போகவில்லை. ஆட்டைத் தேடினான், வெள்ளிக்காசைத் தேடினாள், கண்டுபிடித்தார்கள். எந்த ஒரு பொருளை நாம் தொலைத்தாலும், அதைத் தேடி கண்டுபிடிக்க முயற்சி செய்ய வேண்டும். தொலைந்து போன எத்தகைய பொருளாயினும் தானாக நம் முன்வந்து நிற்காது. **முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.** இந்த வசனங்களில் மூன்று வாக்குறுதிகளை உறுதி செய்கிறார் நம் தேவன்.

1. கேளுங்கள் தரப்படும் / கொடுக்கப்படும்

2. தேடுங்கள் கண்டடைவீர்கள் / கண்டுபிடிப்பீர்கள்

3. தட்டுங்கள் திறக்கப்படும் /
அடைக்கப்பட்டவை திறக்கும்.

வேதாகமத்திலே ஆண்டவர் எத்தனையோ காரியங்களை / விஷயங்களை சீடர்களுக்கும், மற்றவர்களுக்கும் தெளிவாய் புரிந்து கொள்ள உவமைகளை உபயோகப்படுத்தினார். இந்தச் செய்தியில் கொடுக்கப்பட்டுள்ள மூன்று தலைப்புகளும் அவரின் பிள்ளைகளாகிய நமக்கு மிகவும் தேவையாயிருக்கிறது. அதிக

பிரயோஜனமாகவும் இருக்கிறது. பல அறிவுரைகளை நமக்குத் தருகிறது. ஆண்டவர் சொல்லைக் கேட்போம். ஆண்டவரைத் தேடுவோம். பரிசுத்தமாயிருந்து பரலோக வாசலைத் தட்டுவோம்.

## *1. கேளுங்கள் தரப்படும்*

*நீங்களும் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் (யோவான் 15 : 7).*

கர்த்தர் மனிதர்களாகிய நமக்கு / நாம் கேட்கும் காரியத்தை வெற்றி அடையச் செய்கிறதற்கு சில நிபந்தனைகளை வைக்கிறார். யோ. 15 : 7-இல் கர்த்தர் என்ன சொல்லுகிறார் / என்ன நிபந்தனை போடுகிறார் என்றால், கர்த்தரிலும் அவரது வார்த்தையிலும் நிலைத்திருக்க வேண்டும். அப்போது நாம் கேட்டுக் கொள்வதை நமக்குக் கர்த்தர் தருவார்.

கேளுங்கள் என்ற உரிமையை நாம் நேசிக்கும் இரக்க சுபாவம் கொண்டுள்ள ஒருவரிடம் தான் கொடுப்போம். ஆண்டவர் அந்த உரிமையை நமக்கு வழங்குகிறார் என்றால் நம்மீது அவர் வைத்துள்ள அன்பு எவ்வளவு பெரியது என்பதை உணர முடியும். கர்த்தரின் அன்புக்கு ஈடாக நாம் எதையும் ஒப்புமைப்படுத்த முடியாது. ஆகவேதான் ஆவியின் கனியாகிய ஒன்பதில் முதலாவதாக அன்பை வைத்தார். மற்ற எட்டும் அன்பிற்குள் அடங்கும். அன்பு, இரக்கம், கருணை, மன்னிக்கும் சிந்தை, ஆசீர்வதித்தல் போன்ற எல்லா நற்குணாதிசயங்களையும் ஒருங்கே பெற்ற நம் ஆண்டவரிடம் உரிமையோடு கேட்போம். சந்தேகமில்லாமல் கேட்போம். நிச்சயமாக நமக்குத் தருவார். ஆனால், நாம் ஒன்று செய்ய வேண்டும். அது என்னவென்றால், கர்த்தரிலும் அவர் சொல்லும் வார்த்தையிலும் உறுதியாய் நிலைத்திருப்போமானால், நம்முடைய ஜெபங்களும் சிறப்பானதாக அமையும். எனவே, அப்பேர்ப்பட்டவனுடைய ஜெபத்திற்குக் கண்டிப்பாக பதில் உண்டு. அப்போது *என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் (யோ. 14 : 14)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

## *ஞானத்தைக் கேட்ட யெதிதியா (சாலொமோன்) - கர்த்தருக்குப் பிரியமானவன்*

தாவீது ராஜாவின் மகனான யெதிதியா (பட்டத்திற்கு வரும்போது மிகவும்) சிறுபிள்ளையாயிருந்தான். (1 இராஜா 3 : 7) தன்னுடைய தகப்பன் எவ்வளவு ஞானமாய் நடந்து நாற்பது வருட காலமாக இஸ்ரவேல் மக்களுக்கு நியாயம் விசாரித்தார். போர்களை நடத்தினார். கர்த்தராகிய உம்மிடம் ஆலோசனைப் பெற்று, அதன்படி நடந்ததால் தொட்ட காரியம் எல்லாம் வெற்றியைக் கொண்டு வந்து சேர்த்தது. எல்லாக் காரியத்திலும் தேவனை முன் நிறுத்தி வேலையைச் செய்தார். அதையெல்லாம் பார்த்து, பார்த்து வளர்ந்த யெதிதியா என்ற சாலொமோன், தாவீதுக்குப் பின் அரியணை ஏறியதும் அவன் பார்வையில் பட்டது என்னவென்று பார்த்தால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான இஸ்ரவேல் ஜனங்கள். இவ்வளவு பெரிய ஜனக்கூட்டத்தை வழிநடத்துவதற்கும், நியாயம் விசாரிக்கிறதற்கும் ஞானம் இருந்தால்தான் முடியும் என்று சாலொமோன் யோசித்தார்.

## *ஆண்டவர் சாலொமோனை எப்படி நினைத்தார்:*

சிறுவயது பையனாக இருந்தபடியால் ஒரு தரிசனம் மூலமாக சாலொமோனை சந்தித்தார். **நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்** என்றார். தேவன் கேட்டவுடன் நான் யோசித்து நாளைக்குச் சொல்லுகிறேன் என்று சாலொமோன் கூறவில்லை. கர்த்தர் கேட்டவுடன் எதுவும் யோசிக்காமல் தன் தகப்பனாகிய தாவீதைப் போல் இஸ்ரவேல் மக்களை நியாயம் விசாரிக்க **ஞானமுள்ள**

**இருதயத்தைத் தந்தருளும்** என்று கேட்டான். உண்மையிலே சாலொமோன் சொன்ன வார்த்தையைக் கேட்டவுடன் தேவன் ஆச்சரியப்பட்டிருப்பார். **தன்னைத் தாழ்த்தி** தன்னுடைய உண்மை நிலைமையை சாலொமோன் எடுத்துச் சொன்னதைக் கேட்ட தேவன், அவன் கேட்ட ஞானத்தைக் கொடுக்கச் சித்தமானார்.

***சாலொமோனுக்குக் கிடைத்த ஞானம்***

தன் இன்பத்திற்காக எதையும் வேண்டிக் கொள்ளாமல், தம் முன்னால் உள்ள பணியானது மிகவும் பெரியது என்று தன்னைத் தாழ்த்தி, ஒரு ராஜா அறிக்கையிட்டது / தன்னுடைய இயலாமையை எடுத்துச் சொன்னது கர்த்தரின் பார்வையில் மிகச் சிறந்ததாகக் காணப்பட்டது. ஒரு ராஜா கேட்டதையே கொடுக்கச் சித்தமான தேவன் நாம் கேட்பது எதுவாக இருந்தாலும் அதை நான் தருவேன் / கொடுப்பேன் / செய்வேன் என்று வாக்குறுதி தருகிறார். நாம் அந்த வாக்குறுதியைப் பெற்றுக் கொள்வோமாக. கர்த்தர் தந்த ஞானத்தினால் யெதிதியா தன் தகப்பனைப் போல் நாற்பது வருடங்கள் சிறப்பாக, எந்த பிரச்சனையும் இல்லாமல், போர் தொடுக்காமல் மிகவும் அமரிக்கையாக இஸ்ரவேல் தேசத்தை அரசாண்டான்.

***2. தேடுங்கள் கண்டடைவீர்கள்:***

*''இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகை தேடினான்...'' (லூக். 19:3).*

ஒரு ஆயக்காரன் ஆண்டவரைக் காண என்னென்ன வழிகளை நாடித் தேடினான் என்பதை லூக். 19-ஆம் அதிகாரத்தில் காணலாம். ஆயக்காரனின் பெயர் சகேயு. இவன் எரிகோவில் வாழ்ந்து, வரி வசூல் செய்யும் வேலையைச் செய்து வந்தான். மிகப்பெரிய செல்வந்தன், யூதன், குள்ளமானத் தோற்றம் கொண்டவன்.

***ஆண்டவரைப் பற்றி சகேயு அறிந்தவை***

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அற்புதங்களையும், குணமாக்கும் வல்லமைகளையும் கேள்விப்பட்டிருந்தான். இப்பேர்ப்பட்ட மகிமை பொருந்தியவரை நேரில் பார்க்க வேண்டும் / சந்திக்க வேண்டும் / நேரிடையாகக் காண்பதற்கு மிகவும் ஆவல் கொண்டவனாய் இருந்தான். குள்ளனாக இருந்தபடியால் இயேசுவைக் காண கூட்டத்தில் முன்னாக ஓடுகிறான், மரத்தில் ஏறுகிறான். மிகுந்த பணக்காரனாய் இருக்கும் எந்த மனிதனும் இப்படி ஓடவோ, மரத்தில் ஏறவோ மாட்டான்.

தேவனுடைய பார்வையில் எந்த ஒரு மனிதனுடைய தோற்றம் பெரிதாகக் கருதப்படுவதில்லை. அவன் குள்ளனாக இருந்தாலும், தன்னுடைய உருவ அமைப்பை ஒரு குறைபாடாக எண்ணாமல், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் காண வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் ஆவலாக இருந்தான். நம் கர்த்தரும் எந்த ஒரு மனிதனுடைய தோற்றத்தையோ, நிறத்தையோ, உடலின் குறைபாட்டையோ, பார்ப்பது கிடையாது. (No Discrimination) ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தேடும் விஷயத்தில் அவனுடைய உள்ளம் / இருதயம் எப்படி உள்ளது என்பதைத்தான் பார்க்கிறார். எரிகோ நகரத்திற்கு வந்ததன் நோக்கம் சகேயுவைக் காண வேண்டும். தன்னை அவனுக்கு வெளிப்படுத்த வேண்டும். எரிகோ பட்டணத்தார் மத்தியில் சகேயுவை ஒரு சாட்சியாக நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இயேசுவானவர் வந்திருக்க வேண்டும்.

தன்னைப் பற்றி எரிகோ பட்டணத்தார் என்ன நினைப்பார்கள் என்றெல்லாம் சகேயு சிறிதும் சிந்திக்கவே இல்லை. கர்த்தரும், தன்னைக் காண வேண்டும் என்ற சகேயுவின் விடாமுயற்சியையும், தேடுதலையும் கண்டார். மகதலேனா மரியாள் எப்படி கல்லறைத் தோட்டத்தில் இங்கேயும்,

அங்கேயுமாக உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைத் தேடிக் கண்டுபிடித்தாளோ, அதேபோல நிக்கொதேமு இரவில் ரோமர்களுக்கத் தெரியாமல் இயேசுவைக் காண வந்த உத்தம சீடன். பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க என்ன செய்ய வேண்டும் என்று கிறிஸ்துவிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள தன்னைத் தாழ்த்தி கர்த்தரிடம் கேட்டு தெளிவான அறிவை / ஞானத்தைப் பெற்றுக் கொண்ட தாழ்மையான சபை குரு. வேதாகமத்தில் இன்னும் எத்தனையோ பேர் ஆண்டவரைத் தேடி கண்டுபிடித்திருக்-கிறார்கள். தாவீது ராஜா தன் மகன் சாலொமோனுக்குச் சொன்ன அறிவுரை :-

*நீ அவரைத் தேடினால், உனக்குத் தென்படுவார் (1நாளா. 28 : 9).*

யூதா, பென்யமீன் கோத்திரத்தை நோக்கி அசரியா கூறியது : ... *நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார். (2 நாளா. 15 : 2).* சகேயு ஆண்டவரைத் தேடி ஒரு மரத்தின் மேல் அமர்ந்தான். தம்மைத் தேடி அலைந்த மகதலேனா மரியாளுக்கு எப்படித் தம்மை வெளிப்படுத்தினாரோ அதேபோல் தம்மைக் காண அலைந்து, ஓடி, மக்களுக்குப் பயந்து அத்திமரத்தின் இலைகளுக்குள் தன்னை மறைத்து அமர்ந்திருந்த சகேயுவைத் தேடி கிறிஸ்துவானவர் அந்த மரத்துக்குக் கீழே வந்து **நின்று அண்ணாந்து பார்த்து அவனைக் கண்டு சகேயுவே சீக்கிரமாய் இறங்கி வா** என்றார். சகேயுவின் நிலைமையில் நாம் இருந்தால் நம்முடைய மனநிலைமை எப்படி இருந்திருக்கும் என்று யோசிப்போம். ஆண்டவர் அறியாமல், தான், ஆண்டவரைக் காண வேண்டும் என்று நினைத்தான். ஆனால், ஆண்டவரோ சகேயுவின் முன் வந்து நின்றார். சகேயு தான் தேடின ஆண்டவரை நேருக்கு நேராகக் காணும் வாய்ப்பைப் பெற்றான், கண்டான், ஆனந்தத்தின் எல்லைக்குச் சென்றான்.

### *3. தட்டுங்கள் திறக்கப்படும்*

*''கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித்தள்ளுவான்...'' (மாற்கு 16 : 3).*

மகதலேனா மரியாள், யாக்கோபின் தாயாகிய மரியாள், சலோமே என்ற மூன்று பெண்களும் ஆண்டவருடைய உடலுக்கு சுகந்த வர்க்கமிடுவதற்கு கல்லறைக்கு வந்தனர். அப்போது, கல்லறையின் வாசலை ஒரு பெரிய கல்லை வைத்து, ரோமர்கள் மூடி வைத்ததை நினைத்து, யார் அந்த **அடைப்பைத் தங்களுக்காக திறந்துவைப்பார்கள்** என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

நம்முடைய வாழ்க்கையில் அநேகக் காரியங்கள் அடைக்கப்பட்டவைகளாக இருக்கும். நாம் எவ்வளவு முயற்சி செய்தாலும் அந்த அடைப்பு தடைபட்டவைகளாகவே இருக்கும். ஆனால், கர்த்தர் நமக்குத் தரும் வாக்குறுதி என்னவென்றால், அடைக்கப்பட்டவைகள் ஒரு நாள் கண்டிப்பாகத் திறக்கப்படும் என்பதே.

ஆபிரகாம் சாராளின் வாழ்விலே ஈசாக்கைக் காண சாராளுக்கு 89 வயது வரை கர்ப்பமானது அடைக்கப்பட்டிருந்தது. 90-வது வயதில் கர்த்தரால் திறக்கப்பட்டது.

ஈசாக்கு ரெபெக்காளின் வாழ்வில் இரட்டைப் பிள்ளைகளான ஏசா, யாக்கோபைக் காண திருமணமாகி, 20 வருடங்கள் ரெபெக்காளின் கர்ப்பமானது அடைபட்டிருந்தது. அதன்பின் கர்த்தரால் திறக்கப்பட்டது.

அன்னாளுக்கு தற்காலிகமாக கர்ப்பத்தை தேவன் அடைத்திருந்தார். அதன்பின் சாமுவேல் பிறந்தான். அதன்பின் 5 பிள்ளைகள் அன்னாளுக்குப் பிறந்தார்கள்.

அடைக்கப்பட்ட கதவைத் தட்டினால் தான், உள்ளேயிருப்பவர்கள் திறப்பார்கள். நாமும் விடாமுயற்சியாய் தட்ட அழைக்கப்பட்டிருக்கிறோம்.

பெண்கள் இயேசுவின் கல்லறைக்கு வருவதற்கு முன்பே, தூதனானவர் கல்லைப் புரட்டித் தள்ளுவதற்கு முன்பே ஆண்டவர்

உயிர்த்தெழுந்தார். கல்லறை மூடியிருக்கும் போதே உயிர்த்தெழுந்த உடலுடன் ஆண்டவரால் வெளியே வருவதற்கு வரமுடியும். ஆண்டவர் உயிர்த்தெழுந்தார், இயேசுவின் உடல் இங்கே இல்லை என்பதை வெளிப்படுத்துவதற்கு, மற்றவர்கள் உள்ளே சென்று காண்பதற்காக தூதன் கல்லைப் புரட்டித் தள்ளினான்.

*__கல்லை, கல்லறையின் வாயிலில் வைக்கக்காரணம்__*

*“கர்த்தருடைய தூதன்... வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான்” (மத். 28:2).*

*கிணற்றின் வாயிலிருந்த கல்லைப் புரட்டி... ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான் யாக்கோபு (ஆதி. 29:10).*

ஆண்டவர் உயிர்த்தெழுந்ததை அறியாமல் யாராவது வந்தால் கல்லறையை அடைத்திருந்த கல்லானது ஒரு தடைக்கல்லாக அமைந்துவிடக் கூடாது என்பதற்காக தூதன் அந்த தடைக்கல்லை புரட்டித் தள்ளினான். யாக்கோபு தன் பெற்றோர் இருந்த தேசத்தை விட்டு பதான் அராமிலிருக்கிற லாபானின் தேசத்திற்கு வந்தபோது, அங்கிருந்த ஒரு கிணற்றின் வாயிலானது ஒரு கல்லால் மூடப்பட்டிருந்தது. ஆடுகள் தண்ணீர் குடிப்பதற்கு அடைக்கப்பட்டிருந்தக் கல்லைப் புரட்டி யாக்கோபு தண்ணீர் காட்டினான்.

தூதன் புரட்டித் தள்ளியதும், யாக்கோபு புரட்டித் தள்ளியதும் இரண்டும் உண்மை நிகழ்வு. நாம் எந்த ஒரு அடைப்பையும் விடாமுயற்சியாய் தட்டினால் அடைப்பெல்லாம் நீங்கி, நல்ல பெரியதொரு ஆசிகளை நாம் பெற்றுக் கொள்ளலாம். தூதன் கல்லைப் புரட்டி, அதின் மேல் அமர்ந்தது எதைக் குறிக்கிறதென்றால், அந்தக் கல்லை மீண்டும் யாரும் புரட்டி வந்து கல்லறையின் வாயிலை அடைக்கத் தேவையில்லை. ஆண்டவர் உயிர்த்தெழுந்தார். ஆசாரியனுக்கும் ஜனங்களுக்கும் இடையே தடையாயிருந்த திரைச்சிலை மேலிருந்து கீழாக இரண்டாக கிழிந்து தேவனுக்கும் மனிதனுக்குமிடையே நல்லுறவு திறந்தது.

நம்முடைய வாழ்க்கையிலும் எத்தனையோ காரியங்கள் திறக்கப்படாமல் அடைக்கப்பட்டிருக்கின்றன. தேவன் அதினதின் காலத்திலே சிறப்பாக அடைக்கப்பட்டவைகளை நீக்கிவிடுவார். தாவீது, சாமுவேல் தீர்க்கனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்தான். ஆனால், அரியணையில் அமர முடியாமல் அடைக்கப்பட்டிருந்தது. சவுலின் மரணத்திற்குப் பிறகு கர்த்தர் அடைப்பைப் புரட்டித் தள்ளினார். தாவீதை அரியணையில் அமரச் செய்தார். கர்த்தர் நம் குடும்பத்தில் உள்ள அடைப்பை திறக்கும் வரைக்கும் நாம் பொறுமையோடு காத்திருத்தல் நல்லது.

கேளுங்கள் தரப்படும் என்ற வாக்குறுதியில் லூக்கா 17-ஆம் அதிகாரத்தில் பத்து குஷ்டரோகிகள் இயேசுவானவரைக் கண்டனர். நாட்டிற்குள் செல்ல முடியாமல் நாட்டிற்குப் புறம்பே இருந்தனர். யாரையும் பார்த்து பேச முடியாமல் வாழ்ந்து வந்தனர். இயேசு ஐயரே எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். இரக்கத்தில் சம்பன்னரான நம் இயேசுவானவர் அந்த பத்து பேருக்கும் அற்புத சுகம் தந்தார். பர்திமேயு குருடன் தாவீதின் குமாரனே! எனக்கு இரங்கும் என்று ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டான். தான் பார்வையடைய வேண்டும் என்று கேட்டான். இயேசுவானவர் பர்திமேயுவுக்கு தான் படைத்த உலகைக் காண பார்வையைக் கொடுத்தார். நாம் கேட்டால் போதும் நிச்சயமாக கர்த்தர் நமக்குத் தருவார். கர்த்தருடைய ஜெபத்தில் கூட எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை எங்களுக்குத் தாரும் என்று நம்மை கேட்கச் சொல்லுகிறார். ஆகையால் விசுவாசத்தோடு கேட்போம், பெற்றுக்கொள்வோம்.

தேடுங்கள் கண்டடைவீர்கள் / கண்டுபிடிப்பீர்கள் என்ற வாக்குறுதியில் மேசியா வருவார் வருவார் என்று எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்கள் யூதர்கள். கிறிஸ்துவானவர் பெத்லகேமில் பாலகனாய் பிறந்த போது, தூதனால் நற்செய்தி பெற்று தேவபாலகனைத் தேடிப் போனார்கள். முன்னணையில் கிடத்தியிருந்த பாலகனை முதன்முதலில் கண்டுபிடித்தார்கள். கண்குளிர கண்டடைந்தார்கள். உலகக் காரியங்களுக்காக நம் தேவைகளுக்காக கடல் கடந்து கூட வேலையைத் தேடுகிறோம். ஆனால், நல்ல சரீர, சுகம், பெலன், ஜீவன் ஆயுளைத் தந்திருக்கும் நம் ஆண்டவரை நாம் மறக்காமல் தேட வேண்டும். அப்போது நாம் எதிர்பார்க்கும் காரியத்திலே ஒரு வெற்றியை / தேவ மகிமையை நாம் நிச்சயம் காண்போம் என்பதில் சந்தேகமில்லை.

தட்டுங்கள் திறக்கப்படும் என்ற வாக்குறுதியில் திறக்கப்படாமல் அடைக்கப்பட்டிருக்கும் ஒரு வீட்டுக்கதவு, தண்ணீர் போக முடியாமல் ஏதாவதொன்று அடைத்துக் கொண்டிருக்கும் பாதை, சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருப்பவர்கள் எப்போது சிறைச்சாலைத் திறக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டேயிருப்பார்கள். வேதாகமத்திலே சிறைச்சாலையில் அடைக்கப்பட்டவர்களுக்கு சிறைச்சாலையின் கதவு எப்படித் திறக்கப்பட்டது என்று காண்போம்.

(ஆதி. 39 : 20) யோசேப்பின் எஜமான் அவனைப் பிடித்து ... சிறைச்சாலையிலே அவனை ஒப்புவித்தான். அந்தச் சிறைச்சாலையில் யோசேப்பு இருந்தான். அடைக்கப்பட்டது எதுவாக இருந்தாலும் அந்த வாழ்க்கை தற்காலிகமானதே. இங்கே பார்த்தால் யோசேப்பை சிறையில் அடைத்தது பார்வோனின் பிரதானியும், தலையாரிகளுக்கு அதிபதியுமான போத்திபார் என்னும் எகிப்து தேசத்தான். காலங்கள் கடந்தது. எகிப்தின் ராஜாவான பார்வோன், தான் கண்ட சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்வதற்காக பார்வோன் யோசேப்பை சிறைச்சாலையிலிருந்து அழைத்து வருமாறு கட்டளை பிறப்பித்தான். சிறைச்சாலையின் கதவு திறக்கப்பட்டது. யோசேப்பு அடைக்கப்பட்டிருந்த சிறையிலிருந்து உள்ளத்திலே ஆண்டவரைத் கூப்பிட்டுக் கொண்டேயிருந்தான். யோசேப்பு சிறையிலிருந்து வெளியே வந்தான். எகிப்திலே உயர்த்தப்பட்டான்.

அதேபோல் பவுலையும், சீலாவையும் அநேக அடிகள் அடித்து, சிறையிலே போட்டு அவர்கள் கால்களைத் தொழு மரத்தில் மாட்டி வைத்தான் சிறைக்காவலன். அடைக்கப்பட்ட சிறைச்சாலையின் உள்ளேயிருந்தவாறு பவுலும், சீலாவும் கரங்களைத் தட்டி துதித்துப் பாடினார்கள். இந்தத் தொனியை காவலன் கேட்டுக் கொண்டிருந்தான். தேவனும் கேட்டுக் கொண்டிருந்தார். அப்போது நடு இராத்திரியிலே பூமி மிகவும் அதிர்ந்தது. கதவுகள் எல்லாம் திறவுண்டது. இருவரின் கட்டுகளும் கழன்று போயிற்று. சிறைச்சாலைக் காரனையும், அவன் வீட்டாரையும் இரட்சிக்கப்படுவதற்காக தேவனால் பவுலும், சீலாவும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். பவுலையும், சீலாவையும் சிறைச்சாலையில் ரோமர்கள் அடித்து அடைத்தனர். தேவன் தன் பிள்ளைகளின் பட்சத்திலே இருந்து காத்தார். ரோமர்களே வந்து சிறைச்சாலையின் கதவைத் திறந்து, வெளியே அழைத்துக் கொண்டு போய் புறப்பட்டுப் போகும்படி கேட்டுக் கொண்டார்கள்.

கர்த்தரை நோக்கித் கூப்பிட்டால், கர்த்தர் தாமதிக்காமல் அடைக்கப்பட்டிருக்கும் சகலத்தையும் திறப்பார் என்பதில் சந்தேகம் கிடையாது. உரிமையோடு கேட்போம், முயற்சியோடு தேடுவோம். விசுவாசத்தோடு அழைப்போம். நமக்கு தேவனால் கொடுக்கப்படும் / கண்டுபிடிப்போம் / பெற்றுக் கொள்வோம் / விடுதலைப் பெறுவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

**– சகோதரி. பேர்ல் குயின்ராஜா**

# IBT-இன் நிகழ்வுகள்



IBT நிறுவனத் தலைவர் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களின் நினைவு நாளான ஜூன் 2-ஆம் தேதியன்று IBT மையத்தில் தேவ செய்தியளிக்கும் திரு. M. ஜான் வில்லியம் அவர்கள்.



ஜூன் மாதம் 11-ஆம் தேதி முதல் 27-ஆம் தேதி வரை IBT மையத்தில் நடைபெற்ற லம்பானி NT பேஜ் செட்டிங் பணி செய்யும் திரு. எபிநேசர் இளங்கோ (Wycliffe India) அவர்களும், மொழி பெயர்ப்பாளர் சகோ. பரமேஷ் அவர்களும்.




ஜூன் மாதம் 14-ஆம் தேதியன்று கோத்தகிரி C.S.I. லூக்கா ஆலய சபா மண்டபத்தில் நடைபெற்ற படுகா புதிய ஏற்பாடு சங்கீதம், நீதிமொழிகள் அடங்கிய "Audio Device" வெளியீடு.




படுகா புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் அடங்கிய "Audio Device" வெளியீட்டு விழாவில் படுகா உடையில் நடனமாடிய சிறுமிகள்.



படுகா புதிய ஏற்பாடு சங்கீதம், நீதிமொழிகள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட "Audio Device" வெளியீட்டு விழாவில் பங்கேற்றவர்கள்.



29.6.2025 அன்று திருப்பூர் C.S.I. ராபர்ட்சன் நினைவு ஆலயத்தில் தேவ செய்தியளிக்கும் சகோ. கிதியோன் அவர்கள்.

# IBT-இன் நிகழ்வுகள்



8.7.2025 அன்று ஒட்டன்சத்திரத்திலுள்ள
"Mut Retreat Centre"-இல் பங்கேற்ற
Retired Missionaries.



13.7.2025 அன்று மேட்டூரிலுள்ள
ஞானக்கன்மலை சபையில் தேவ செய்தியளிக்கும்
சகோ. சைமன் அவர்கள்.



19.7.2025 அன்று கோத்தகிரியில் நடைபெற்ற
IBT திட்டக் கூடுகையில் தேவ செய்தியளிக்கும்
திரு. ராஜகுமார் அவர்கள்.



19.7.2025 அன்று கோத்தகிரியில் நடைபெற்ற
திட்டக்கூடுகையில் பங்கேற்றவர்கள்.



20.7.2025 அன்று ஊட்டியிலுள்ள
OBC சபையில் தேவ செய்தியளிக்கும்
திரு. அதிசயம் அவர்கள்.




20.7.2025 அன்று கோத்தகிரியிலுள்ள "New Life
Prayer House" சபையில் தேவ செய்தியளிக்கும்
திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள்.

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக எங்களது அன்பின் வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்கிறோம்.

**“தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்'' (மத். 23 : 12).**

இரண்டு மனுஷர்கள் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றொருவன் ஆயக்காரன். பரிசேயனுடைய ஜெபம், தேவனுக்கு முன்பாக தன்னை உயர்த்தி நீதிமானாகக் காண்பித்து, மற்றவர்களை அற்பமாக எண்ணினதைப் போல இருந்தது. ஆனால், பரிசேயனுடைய ஜெபமோ, தேவனுக்கு முன்பாக தன்னை மிகவும் தாழ்த்தி, தூரத்தில் நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு, தேவனே பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்றான். இயேசு கிறிஸ்து சொல்கிறார் ''ஆயக்காரனே நீதிமானாக்கப்பட்டவனாய் திரும்பிப் போனான்” என்றார்.

நேபுகாத்நேச்சார் என்னும் பாபிலோன் ராஜா ஒருநாள் அரண்மனையின் மேல் உலாவிக் கொண்டிருக்கும் பொழுது, ''இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால் என் மகிமைப் பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரண்மனையாக நான் கட்டிய மகா பாபிலோன் அல்லவா” என்று சொன்னான்.

இந்த வார்த்தை ராஜாவின் வாயில் இருக்கும் போதே, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, *''ராஜாவாகிய நேபுகாத் நேச்சாரே, ராஜ்யபாரம் உன்னை விட்டு நீங்கிற்று. மனுஷரினின்று தள்ளப்படுவாய்;* வெளியின் *மிருகங்களோடு சஞ்சரிப்பாய்; மாடுகளைப் போல் புல்லை மேய்வாய்; இப்படியே உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார் என்பதை நீ அறிந்து கொள்ளுமட்டும் ஏழு காலங்கள் உன்மேல் கடந்து போகும் என்று விளம்பினது.* அந்நேரமே இந்த வார்த்தை அவன் மேல் நிறைவேறிற்று; அவன் ராஜ்யத்திலிருந்து தள்ளப்பட்டு, மாடுகளைப் போல புல்லை மேய்ந்தான். பின்பு சில நாட்கள் சென்ற பின்பு அவன் புத்தி தெளிந்து கர்த்தரை புகழ்ந்து அவரையே மேன்மைப்படுத்தினான். அவன் இழந்த ஸ்தானத்தை கர்த்தர் அவனுக்கு திரும்பக் கொடுத்தார்.

தாவீது, சமஸ்த இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருந்த போது, உடன்படிக்கைப் பெட்டியை ஓபேத் ஏதோமின் வீட்டிலிருந்து தாவீதின் நகரத்திற்கு கொண்டு வரும் பொழுது, சணல் நூல் ஏபோத்தைத் தரித்துக் கொண்டு உடன்படிக்கைப் பெட்டியின் முன்பாக தன் முழு பலத்தோடு நடனமாடினான். சவுலின் குமாரத்தி மீகாள் தாவீதைக் கண்டு, அவன் ராஜ வஸ்திரம் தரியாமல் சணல் நூல் ஏபோத்தை உடுத்தியிருந்ததைக் கண்டு அற்பமாய் பேசினாள். அதற்கு தாவீது, “இதைப் பார்க்கிலும் இன்னும் நான் நீசனும் என் பார்வைக்கு அற்பனுமாவேன்” என்று தன்னைத் தாழ்த்தினார். இஸ்ரவேலின் முதல் இராஜாவான சவுலைக் கொல்ல வாய்ப்புகள் இருந்தபோதும் அவனைக் கொல்லாமல், கர்த்தர் அபிஷேகம் பண்ணியவரைக் கொல்ல மாட்டேன் என்றும், தன்னை ஒரு தெள்ளுப்பூச்சிக்குச் சமமாக ஒப்பிட்டு, சவுலுக்கு முன்பாகவும் தன்னைத் தாழ்த்தினான். இஸ்ரவேலின் ராஜாக்களில் எல்லோரைப் பார்க்கிலும் தாவீதை, கர்த்தர் மேன்மைப்படுத்தினார்.

நமக்கு திறமைகள், செல்வங்கள், மேன்மைகள், ஆசீர்வாதங்கள் இல்லாத பொழுது நம்மை தாழ்த்துவதைப் பார்க்கிலும், தாவீதைப் போல எல்லாமிருக்கும் பொழுது நம்மை தாழ்த்துவதே தேவனை நாம் மேன்மைப் படுத்துவதாயிருக்கும்.

*''கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்'' (யாக். 4:10).*

கடந்த ஜூலை மாதம் 8-ஆம் தேதியன்று ஒட்டன்சத்திரத்திலுள்ள Mut Retreat Centre-இல் Missionaries-களுக்கான ஒருநாள் கூடுகை நடைபெற்றது. அதில் வெவ்வேறு மிஷனெரி ஸ்தாபனங்களிலிருந்து பணிபுரிந்த மற்றும் பணிபுரிகிற மிஷனெரிகள் 40-க்கும் மேலானவர்கள் கலந்து கொண்டார்கள். IBT ஊழியத்திலிருந்து திரு. G.N. சுந்தர், திரு. தம்பிதுரை, திருமதி. எலிசபெத், திரு. N. ஜார்ஜ் வில்லியம் ஆகியோர் கலந்து கொண்டனர். தேவ செய்திகள் மற்றும் இரு மருத்துவர்களின் மூலமாக வயதான காலத்தில் உடல் நலம் பேணுவது குறித்தான நல்ல ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

கடந்த ஜூலை மாதம் 13-ஆம் தேதியன்று மேட்டூரிலுள்ள "அக்னி எழுப்புதல் சபையில்" சகோ. கிதியோன் அவர்கள் தேவ செய்தியளிக்க, திரு. ஜான் வில்லியம் அவர்கள் IBT ஊழிய விளக்கமளித்தார். இதேநாள் இதே ஊரிலுள்ள சீலோவாம் சபையிலும் சகோ. கிதியோன் அவர்கள் தேவ செய்தியளிக்க, திருமதி. நவமணி சேகர் அவர்கள் IBT ஊழிய விளக்கமளித்தார். இதே நாள் இதே ஊரிலுள்ள ஞானக்கன்மலை சபையில் சகோ. சைமன் அவர்கள் தேவ செய்தியளிக்க, சகோ. சண்முகவேல் அவர்கள் IBT ஊழிய விளக்கமளித்தார்.

IBT-இன் இவ்வருடத்தின் இரண்டாவது திட்டக் கூடுகை 19.7.2025 அன்று கோத்தகிரியிலுள்ள "Highfield UESI - Conference Hall-இல் நடைபெற்றது. பிரதிநிதிகள் மற்றும் சில புதிதாக வந்தவர்களும் சேர்த்து மொத்தமாக 42 பேர் கலந்து கொண்டனர். சகோ. ராஜகுமார் அவர்கள் தேவ செய்தியளித்தார். இக்கூடுகையில் IBT தலைவர் திரு. ஜெபஸ் செல்வின் அவர்கள், செயலாளர் திரு. வரமணிராஜ் அவர்கள், பொருளாளர் திரு. M. ஜான்வில்லியம் அவர்கள், பணித்தள இயக்குநர் திரு. சாமுவேல் ஞானதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார்கள். மறுநாள் 20.7.2025 அன்று ஊட்டியிலுள்ள OBC சபையில் திரு. அதிசயம் அவர்கள் தேவ செய்தியளிக்க, திரு. சாம்சன் அவர்கள் IBT ஊழிய விளக்கமளித்தார். இதே நாளில் கோத்தகிரியிலுள்ள C.S.I. வெஸ்லி ஆலயத்தில் திரு. வரமணிராஜ் அவர்கள் IBT ஊழிய விளக்கமளித்து, தேவ செய்தியளித்தார். இதே நாளில் இதே ஊரில் படுகா "New Life Church"-இல் திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள் தேவ செய்தியளிக்க, திரு. ராஜகுமார் அவர்கள் IBT ஊழிய விளக்கமளித்தார். இந்நாளில் IBT உண்டியல், IBT மூலமாக வெளியிடப்பட்ட இலக்கியப் புத்தகங்களை சபை மக்கள் ஆர்வத்துடன் வாங்கினார்கள். இதைப்போன்று IBT முன்னேற்றக் கூட்டங்கள் நடத்த அந்தந்த ஊரிலுள்ள தாங்குநர்கள், சத்திய வார்த்தைப் பத்திரிகை வாசகர்களும் சபை ஆயர்களை அணுகி, IBT ஊழிய அறிமுகம் கொடுக்கவும், தேவ செய்தியளிக்கவும் அனுமதி பெற்றுத்தர அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். கர்த்தரின் நாம மகிமைக்காக நீங்கள் ஒரு அடி எடுத்து வைத்தீர்களானால், பல மடங்கு ஆசீர்வாதங்களை கர்த்தர் அருளிச் செய்ய வல்லவராயிருக்கிறார். IBT ஊழியத்திற்காக தொடர்ந்து ஜெபியுங்கள். கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் தீங்கணுகாமல் காத்து, நன்மையினால் முடிசூட்ட ஜெபிக்கிறோம்.

கர்த்தரின் பணியில்,
உங்கள் சகோதரன்
*K. ஜெய்சிங்*

# பணித்தளச் செய்திகள்

*<u>மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :</u>*
*<u>சகோ. ஸ்ரீனிவாஸ் சாக்கட்</u>*
*<u>மொழி : பாகேலி</u>*
*<u>பணித்தளம் : காரா - ரேவா</u>*
*<u>(மத்தியப் பிரதேசம்)</u>*

கர்த்தருக்கே துதி உண்டாவதாக!

இயேசு கிறிஸ்துவின் கிருபையால் கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில், பழைய ஏற்பாடு பகுதியில் சங்கீதம் 78 : 1-ஆம் வசனம் முதல் சங்கீதம் 150 : 6-ஆம் வசனம் வரையிலும், நீதிமொழிகள் அதிகாரம் 1 : 1 முதல் அதி. 3 : 35-ஆம் வசனம் வரையிலும் Quotation Marking செய்யப்பட்டன.

மிஷனெரிப் பணியில் ஞாயிறு ஆராதனையும், இரண்டாம் சனிக்கிழமை உபவாச ஜெபக்கூட்டமும் நடத்தப்பட்டன. சுகவீனமடைந்திருந்த இருவருக்கு ஜெபத்தின் மூலமாக கர்த்தர் பூரண சுகம் கொடுத்தார். பதினைந்து பேர் ஞானஸ்நானம் எடுக்க விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள். பாகேலி மொழி பேசும் மக்கள் அநேகர் இயேசு கிறிஸ்துவை அறியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நற்செய்தி சென்றடைய வேண்டும். BSI மூலமாக பாகேலி மொழியிலுள்ள புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் சரிபார்ப்புப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணி துரிதமாகச் செய்யப்பட்டால்தான் அடுத்த லோகோஸ் முகாமில் வெளியிட ஏதுவாக இருக்கும். ஆகவே இப்பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*<u>முன்னேற்றப் பணியாளர் :</u>*
*<u>சகோ. K. சுந்தர்</u>*
*<u>பணித்தளம் : சென்னை (தமிழ்நாடு)</u>*

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் கண்மணிபோல் பாதுகாத்த தேவன் முன்னேற்றப் பணிக்காக பல இடங்களுக்குச் சென்று IBT பங்காளர்கள், தாங்குநர்களைச் சந்தித்து காணிக்கைப் பெறவும், அவர்களுக்காக ஜெபிக்கவும் கிருபை செய்தார். முன்னேற்றப் பணிக்காக ரெட்ஹில்ஸ், பாமதுகுளம், சூரப்பேட்டை, லட்சுமிபுரம், ஆத்தூர் புழல், கொளத்தூர், அஞ்சுகம் நகர், வெற்றி நகர், தணிகாசலம் நகர், ஜவஹர் நகர், பெரியார் நகர், ரெட்டேரி, செந்தில் நகர், கொரட்டூர், மாதானகுப்பம், அம்பத்தூர், ஆவடி, அயனம்பாக்கம், அயனாவரம், பெரம்பூர், அண்ணா நகர், முகப்பேர், வில்லிவாக்கம், கோயம்பேடு, மதுரவாயல், வலசரவாக்கம், K.K. நகர், M.G.R. நகர், சாலி கிராமம், பெரியார் பாதை, கீழ்க்கட்டளை, அசோக் நகர், சைதாப்பேட்டை, அடையார் கிழக்கு தாம்பரம், ராஜா கீழ்ப்பாக்கம், சந்தோஷ்புரம், கோவிலம்பாக்கம், மடிப்பாக்கம் இன்னும் பல இடங்களுக்குச் செல்ல தேவன் கிருபை புரிந்தார்.

சென்னை அடையாரில் சாமுவேல் சுவிசேஷ சபை பாஸ்டர் டைட்டஸ் சாமுவேல் அவர்களைச் சந்தித்து, IBT ஊழியத்தைக் குறித்து விளக்கிக் கூறினேன். இச்சபையில் IBT ஊழியத்திற்கு முன்னேற்றக் கூட்டம் நடத்த சந்தர்ப்பம் கிடைக்கவும், நான் சந்தித்த சுரேஷ் சாம் தம்பதிகளுக்கு குழந்தை பாக்கியத்தை கர்த்தர் அருளிச் செய்யவும், சென்னையிலுள்ள சபைகளில் IBT முன்னேற்றக் கூட்டங்கள் நடத்த சந்தர்ப்பம் கிடைக்கவும், என் குழந்தைகளின் படிப்பிற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :*
*சகோ. கேசப் மிர்கான்*
*மொழி : மிர்கான்*
*பணித்தளம் : கோண்டாபுரி (ஒடிஷா)*

தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

கடந்த மாதத்தில் என் மொழிபெயர்ப்பு மற்றும் மிஷனெரிப் பணிகள் செய்ய கர்த்தர் உதவி புரிந்தார்.

மொழிபெயர்ப்புப் பணியில் பழைய ஏற்பாடு பகுதியில் யோபு புத்தகம் அதிகாரம் 1 : 1 முதல் அதிகாரம் 20 : 29-ஆம் வசனம் வரையிலும் கணினியில் Paratext Software-இல் கீ-இன் செய்தேன். ஜூன் 2-ஆம் தேதியன்று IBT நிறுவனத் தலைவரின் 12-ஆம் ஆண்டு நினைவு தினம் அனுசரித்து ஜெபக்கூட்டம் ஏற்பாடு செய்தேன். அதில் மிஷனெரிகள் பலர் கலந்து கொண்டு நிறுவனர் குறித்து தங்கள் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்கள். வீட்டு ஜெபக்கூட்டம் சுரஹாண்டி, பாயிர்சாகுபா கிராமங்களில் நடத்தப்பட்டன. அதில் இந்திய தேசத்தின் ஆட்சியாளர்களுக்காகவும், வியாதியஸ்தர்கள், மிஷனெரி ஊழியங்கள் மற்றும் பொதுவான கிராமங்களுக்காகவும் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. என்னுடைய மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். என் முழு வேதாகமப் பணிகளை 2026, டிசம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்ய இலக்கு வைக்கப்பட்டுள்ளது. இதற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :*
*சகோ. சாமுவேல் சந்தா*
*மொழி : குவி*
*பணித்தளம் : அப்பர்காண்டி (ஒடிஷா)*

தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் புதிய ஏற்பாடு பாகத்தில் லூக்கா நற்செய்தி நூல் அதிகாரம் 1 : 80-ஆம் வசனம் முதல் அதி. 22 : 71-ஆம் வசனம் வரையிலும் இப்பகுதிகளை வாசித்து சரிபார்ப்புப் பணியில் தலைப்பு, வார்த்தை சரிபார்ப்பு, கமா, முற்றுப்புள்ளி ஆகியன சரி செய்யப்பட்டன.

மிஷனெரிப் பணிக்காக கேஜர கோட்டா கிராமத்திற்குச் சென்று சகோ தேபாவைச் சந்தித்து நற்செய்தியைக் கூறினேன். அவர் தாயாருக்காகவும், தேபாவுக்கு காலில் ஏற்பட்ட வெட்டுக்காயம் சுகமடையவும் ஜெபித்தேன். இம்மொழி நன்கு தெரிந்தவர்களுடன் குழு சரிபார்ப்புப் பணியும் செய்யப்பட உள்ளது. அதன் பிறகே பேஜ்செட்டிங் பணிக்கு அனுப்ப முடியும். இப்பணிகள் தடையின்றி நடக்கவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மிஷனெரி : சகோதரி. சுபீதா*
*பணித்தளம் : பாப்பன்பள்ளி (ஒடிஷா)*

இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

ஜூன் மாதம் முழுவதும் பாதுகாப்பாய் சிறுவர் இல்ல ஊழியங்களை நடத்தித் தந்த தேவனுக்கு நன்றி சொல்கிறோம். நமது அலுவலகத்தில் இருந்து 4-ஆம் தேதி அதிகாலை பணித்தளம் வந்து சேர்ந்தோம். 15-ஆம் தேதி முதல் பிள்ளைகள் சிறுவர் இல்லம் வர ஆரம்பித்தார்கள். வளாகம் மற்றும் அனைத்து அறைகளையும் சுத்தப்படுத்தி புதிய கல்வியாண்டிற்காக ஆயத்தமானோம். 20-ஆம் தேதி முதல் பிள்ளைகளுக்கு வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டது. சிறுவர் இல்லத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்காக கலிமலா சென்றோம். புதிய கேஸ் ஸ்டவ் சிறுவர் இல்லத்திற்கு வாங்குவதற்கு தேவன் உதவி செய்ததற்காக நன்றி சொல்கிறோம். கால நிலை (மழை) மாற்றத்தால் 3 பிள்ளைகளுக்கு

காய்ச்சல்,வாந்தி காணப்பட்டது. அவர்களுக்காக ஜெபித்து மருத்துவமனை அழைத்து சென்று பராமரித்தோம். அந்தகுடா கிராமத்தில் உள்ள நமது சபை விசுவாசி லொக்குமி மிகுந்த பெலவீனமாக இருந்தாள். அவர்கள் வீட்டிற்குச் சென்று ஜெபம் செய்தோம். மேலும் நமது சிறுவர் இல்ல ஊழியங்களுக்காகவும், ஊழியர்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

## உலகச் செய்திகள்

★ தென்கிழக்கு ஆசிய அண்டை நாடுகளான தாய்லாந்துக்கும், கம்போடியாவுக்கும் இடையிலான பதற்றம் புதிய உச்சத்தை அடைந்ததைத் தொடர்ந்து, இருநாட்டுப் படைகளும் வியாழக்கிழமை மோதலில் ஈடுபட்டன. இதில் 11 பேர் உயிரிழந்தனர்.

★ பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் மழை தொடர்பான சம்பவங்களில் மொத்த உயிரிழப்பு 258 ஆக உயர்ந்துள்ளது; 488 பேர் காயமடைந்துள்ளனர்.

★ இந்தியா – பிரிட்டன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம். இந்தியாவுக்கு ரூ. 2 லட்சம் கோடி வர்த்தக வாய்ப்புகள் கிடைக்கும். இந்தியா பிரிட்டன் இடையே சந்தை அணுகலை அதிகரிக்கும் வகையில் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ஜூலை மாதம் 24-ஆம் தேதியன்று கையொப்பமானது.

★ ரஷியாவில் பயணிகள் விமானம் மலைப் பகுதியில் விழுந்து 27.7.2025, வியாழக்கிழமை அன்று விபத்துக்குள்ளானது. விபத்துக்குள்ளானதில் பயணிகள் மற்றும் விமானப் பணியாளர்கள் என மொத்தம் 48 பேர் உயிரிழந்தனர்.

★ தங்கம் விலை புதிய உச்சம் : பவுன் ரூ. 75 ஆயிரத்தைக் கடந்தது.

## எமது தரிசனமும், எமது பணியும்

**<u>எமது தரிசனம் :</u> "இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே"**

**<u>எமது பணி :</u> கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது. மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் "ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை" அமைத்து அனுப்புதல்.**

# ஒரு முக்கிய வேண்டுகோள்

## தேவை

★ கோவை IBT கட்டிடத்திலுள்ள Meeting Hall-இல் கூட்டங்கள் நடத்தப்படும் போது, சப்தம் வெளியே சென்று, அருகாமையிலுள்ள குடியிருப்புகளுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாவண்ணம் Meeting Hall-ற்கு Sound Proof System மற்றும் தகுந்த மாற்றங்கள் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இப்பணிகளுக்கு ரூ. 4,50,000/– முதல் ரூ. 5,00,000/– வரை செலவு ஆகும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இத்தொகையை சந்திக்க தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

★ சென்னையில் பணிபுரியும் முன்னேற்றப் பணியாளருக்கு 1 இருசக்கர வாகனம் தேவைப்படுகின்றது. தற்போதுள்ள பழைய வாகனத்தின் செலவு அதிகமாக வருவதால் புதிய வாகனம் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் செலவு ரூ. 1,10,000/–. இதற்கு தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

★ கோவை IBT அலுவலகத்தில் தற்போது பயன்பாட்டிலுள்ள புதிய Website பணிகள் செய்யப்படும் ஒரு கணினி அடிக்கடி பழுது ஏற்படுவதால், உடனடியாக புதிய (Updated) கணினி தேவைப்படுகிறது. இதன் விலை ரூ. 78,000/–. இதற்கு தாங்குநர் கிடைக்க ஜெபியுங்கள்.

## கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/– |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/– |
| 3. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/– |
| 4. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/– |
| 5. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/– |
| 6. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/– |
| 7. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/– |
| 8. | தேவ சத்தம் | ரூ. 100/– |
| 9. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/– |
| 10. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/– |
| 11. | Introduction to the Books of the Bible | ரூ. 70/– |
| 12. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/– |
| 13. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/– |
| 14. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/– |
| 15. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/– |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

**1. STATE BANK OF INDIA**

A/c. No. : 30008395600
Name : Indian Bible Translators
Branch Code : 7231
Branch : Peelamedu
IFS Code : SBIN0007231

**2. INDIAN BANK**

A/c. No. : 475742259
Name : Indian Bible Translators
Branch Code : S107
Branch : Peelamedu
IFS Code : IDIB000S107

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

# துதியுங்கள்! ஜெபியுங்கள்!!

1. இவ்வருடத்தின் இரண்டாவது திட்டக்கூடுகை திட்டமிட்டபடியே கோத்தகிரியில் கடந்த ஜீலை மாதம் 19, 20 தேதிகளில் நடைபெற்றதற்காகவும், 20–ஆம் தேதி கோத்தகிரியில் இரண்டு ஆலயங்களிலும், ஊட்டியில் ஒரு ஆலயத்திலும் IBT மூலமாக தேவ செய்தியும், IBT ஊழிய விளக்கமும் கொடுக்க சந்தர்ப்பம் கிடைத்ததற்காகவும் கர்த்தரைத் துதியுங்கள். சந்தர்ப்பம் கொடுத்த சபை போதகர்கள், பங்கு பெற்ற சபை மக்களை கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

2. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 5 மொழிபெயர்ப்பாளர்கள் IBT மையம், கோவைக்கு தங்கள் மொழிபெயர்ப்புப் பணிகளையும், சரிபார்ப்புப் பணியையும் மேற்கொண்டார்கள். இதற்காகக் கர்த்தரைத் துதியுங்கள். இதில் 4 மொழிகளில் வேதாகமம், ஒரு மொழியில் புதிய ஏற்பாடும் முடிக்கப்பட்டு, அடுத்த IBT லோகோஸ் முகாமில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. திட்டமிட்டப்படி முடிக்கப்பட ஜெபியுங்கள்.

3. கோத்தகிரியில் முன்னேற்றப் பணியாளராகப் பணிபுரியும் சகோ. ராமலிங்கமும் அவர் மனைவியும் ஊட்டியில் தாங்குநர் ஒருவர் வீட்டிற்குச் சென்று, படுகா வேதாகமம் அவருக்குக் கொடுத்துவிட்டு, பஸ்ஸில் ஏறும்போது இரு சக்கர வாகனம் அவர் மீது மோதியதில் அவர் இடுப்பு எலும்பில் முறிவு ஏற்பட்டதால் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் சிகிச்சை பெற்று வந்த வேளையில் தன் பணியில் தொய்வு ஏற்படாவண்ணம் தன் மகன்களுடன் அவர் மனைவியும் தாங்குநர்களைச் சந்தித்து, காணிக்கைப் பெற்று அலுவலகம் அனுப்பி வந்தார். இது IBT ஊழியத்தில் அவருக்கு உள்ள ஈடுபாட்டையும், அர்ப்பணிப்பையும் தெளிவுபடுத்துகிறது. அவர் மீண்டும் தன் பணியை ஜீன் மாதத்திலிருந்து வழக்கம் போல் இருக்கும் பழைய உற்சாகத்துடனும், சுறுசுறுப்புடனும் ஆரம்பித்துள்ளார். இதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இவர்கள் இருவருக்கும் நல்ல சுகம் பெலன் நீண்ட ஆயுளை கர்த்தர் கொடுத்து, தேவ நாமம் மகிமைப்பட பணிபுரியவும் மூன்று மாதங்களும் இவர் பணியைச் செய்த இரு மகன்களையும் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

4. IBT ஊழியத்திற்கு தேவை என்பதை அறிந்தவுடன், தாமதமின்றி, தேவைகளை சந்தித்து வரும்படியான தாங்குநர்களை ஏற்ற வேளைகளில் கொடுத்து வருவதற்காக கர்த்தரைத் துதிப்போம். கடந்த சிலமாதங்களாக 'சத்திய வார்த்தை' பத்திரிகையில் 2 இரு சக்கர வாகனங்களுக்கு தாங்குநர்கள் கிடைப்பதற்காக பத்திரிகையில் பிரசுரத்தை பார்த்ததுமே, வழக்கமாக உதவி வரும் ஒரு சிலரில், பண்ருட்டியிலிருந்து ஒரு சகோதரர், ஒரு இரு சக்கர வாகனம் வாங்குவதற்காக ரூ. 1,00,000/– கொடுத்து உதவியதால் ஒரு முன்னேற்றப் பணியாளருக்கு புதிய வாகனம் ஒன்று வாங்கும்படி கர்த்தர் அருள் புரிந்தார். தேவைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தக்க சமயத்தில் உதவி புரிந்த சகோதரரையும் அவர் குடும்பத்தையும் கர்த்தர் பரத்திலிருந்து ஆசீர்வதித்து, எல்லா நன்மைகளினாலும் வழி நடத்த ஜெபியுங்கள்.

5. வடமாநிலங்களில் கிறிஸ்தவ மிஷனெரிகளுக்கு பற்பல விதங்களில் உபத்திரவங்கள் நேர்ந்து வந்தாலும், மிஷனெரிப் பணிகள் தொடர்ந்து நடந்து வருவதற்காக கர்த்தரைத் துதியுங்கள். நற்செய்தி சென்றடையாத மக்களுக்கு துரிதமாய் நற்செய்தி சென்றடைய, தடைகள் மாற ஜெபியுங்கள்.


**SEND ALL YOUR CONTRIBUTIONS**

**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.

Phone : 0422 - 4520143

WhatsApp & Mobile : 90470 57414

E-mail : indianbibletranslators@gmail.com

**Web : www.ibtword.com**


## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

வருட சந்தா ரூபாய். 100/–

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.

## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/–ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code**-ஐ **SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

A/c. No. : 1630413107

Name : Word Publishers Trust

Branch : Kalapatti

IFS Code : CBIN0282057

**SCAN & PAY**

Address :

**WORD PUBLISHERS TRUST**

14, Ashok Layout,

Civil Aerodrome Road,

Coimbatore - 641 014.


Editor & Published by On behalf of: **Mr. K. JAISINGH**
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

Printed by: **Mr. C.K. VENKATESH**
Chandra Prabha Press
113-118, V.H. Road, CBE-1.

**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd September 2025

Postal Regd. No. **CB/052/2024-26**

Licensed to Post without Prepayment No.

**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**